ආයතනයේ නම : ජාතික විගණන කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ඉිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர்: தேசிய கணக்காய்வு அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the Institution: National Audit Office

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

குழுவினால் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்வதற்காக நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
முதலாவது பகுதி	
(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வின் செயற்திறன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு புறம்பாக இருந்த போதும் மேற்பார்வை செய்யும் நோக்காகக் கொண்டு இந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுவதுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நேரடி கவனத்திற்கு உட்படுகின்றமையினால் அந்த அறிக்கை பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
இரண்டாவது பகுதி	
(அ) நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் 2018.04.27 ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவதற்காக நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள் இருவர் தொடர்பான விபரங்கள் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதிநிதிகள் இருவர் தொடர்பான விபரங்கள் அமைச்சிற்கு அறிக்கையிடப்படாதிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக அமைச்சுடன் மேற்பார்வை மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தொடர்ச்சியாக உத்தியோகத்தர்கள் இருவரும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்கள் அதற்குரிய பங்களிப்பை தொடர்ச்சியான வழங்கிருந்தனர். தற்போது அந்த பிரதிநிதிகள் இருவர் தொடர்பான விபரங்கள் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தை அழுல்படுத்துகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இந்த ஏற்பாடுகள் ஏனைய நிறுவனமாக இல்லாதிருந்ததுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குரிய சுயாதீன கணக்காய்வு கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுகின்ற தகைமை பெற்ற கணக்காய்வு கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றமையினால், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குரிய கணக்காய்வு தொடர்பாக முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் மேற்பார்வையின் தேவையொன்று எழுந்திருக்கவில்லை.
(ஆ) 2018.01.04 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2019 ஆம் ஆண்டின் போது அழுல்படுத்தப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 30(1) ஏற்பாடுகளின் பிரகாரம் "இலங்கை அரச கணக்காய்வு சேவை" ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு சேவை ஆணைக்குழு தலைக்கப்பட்டமை போன்ற காரணங்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

		கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் காரணமாக சேவை பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்படாமையினால் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்காக மனித வள திட்டமொன்று தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. தற்போது கணக்காய்வு சேவை ஆணைக்குழு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
(இ)	தயாரிக்கப்பட்ட மனித வள திட்டத்தின் மூலம் ஒரு ஊழியருக்காக ஆகக் குறைந்தது 12 மணித்தியால மேலதிக பயிற்சியொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.	தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மனித வள திட்டத்தை தயாரிப்பதற்கு ஒப்பாக இந்த தேவை பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன், இனங்காணப்பட்டுள்ள 80 மணித்தியால பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் கடந்த காலத்தில் காணப்பட்ட வரையரையான நிலைமையில் அமுல்படுத்தப்படவில்லை.
(ஈ)	ஒட்டுமொத்த பதவியணியினர்களையும் உள்ளடக்கிய செயலாற்றல் உடன்படிக்கை தயாரித்து கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	புதிய சேவை பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டு இலங்கை அரச கணக்காய்வு சேவை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் பதவியணியினருடன் செயலாற்றல் உடன்படிக்கை தயாரித்து கைச்சாத்திடல் மேற்கொள்ளப்படும்.
(உ)	மனிதவள திட்டத்தை தயாரிப்பதற்கும், இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் தனிப்பட்ட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு தற்போது வரையில் இயலளவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் அந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
(ஊ)	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் மறுப்பு மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் உள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 36(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சபாநாயகரினால் வெளிவாரி சுயாதீன கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். எனினும், 2020 இன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவர் நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் அந்த கணக்காய்வாளரின் அறிக்கை கிடைப்பதிலும் தாமதம் ஏற்பட்டிருந்தது. விடயப்பரப்பு வினாக்கொத்துக்களுக்கு பதிலளிக்கும் போது அந்த கணக்காய்வு அறிக்கை கிடைக்காதிருந்தமையால், உரிய கணக்காய்வு அபிப்பிராயம் என்ன என்பது குறிப்பிடப்படாதிருந்ததுடன், ஏனைய விடயங்களின் கீழ் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழிவுள்ள அபிப்பிராயம் உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கை கிடைத்துள்ளது.

(எ)	திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட COVID 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சுகாதாரத் துறையின் பரிந்துரைகளின் கீழ் அந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தமையால் நாடு முழுவதும் பரவலாக உள்ள உத்தியோகத்தர்களை வரவழைத்து பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை இந்த நிலைமைக்கு அடிப்படை காரணமாகும். நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கு உரியதாக காலரீதியிலான அத்தியாவசிய பயிற்சி செயலமர்வுகள் மாத்திரம் பொருத்தமான பிரகாரம் முன்னுரிமை மற்றும் ஸூம் (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்தப்பட்டிருந்தது.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி